# சிற்றிலக்கியங்களில் செவ்வியல் இலக்கியத்தின் செல்வாக்கு

# Sitralakiyangalil Seviyal Ilakiyathin Selvakku

*முனைவர் கோ. குணசேகர்*
உதவிப்பேராசியர்
தமிழாய்வுத் துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்

*திரு. சு. சீத்தாராமன்*
தமிழாய்வுத் துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்

**Dr. K. Gunasekar**
*Assistant Professor, Department of Tamil Studies*
*Arignar Anna Government Arts College Villupuram*

**Mr. S. Sitharaman**
*Department of Tamil Studies*
*Arignar Anna Government Arts College, Villupuram*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியக் காலந்தொட்டே தமிழில் சிற்றிலக்கியங்கள் தோன்றி விட்டதாகக் கருதலாம். பத்தப்பாட்டுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய ஐந்தும் ஆற்றுப்படை சிற்றிலக்கியங்கள் ஆகும். பத்தாம் நூற்றாண்டுக்குய பன்னிருபாட்டியல் முதல் முதலாகச் சிற்றிலக்கியங்கள் சிலவற்றிற்கு இலக்கணம் தருகின்றது.*

*பதினெண்கீழ்க்கணக்கில் நாற்பது, எழுபது முதுமொழிக்காஞ்சி என்ற சிற்றிலக்கிய வகைகள் உள்ளன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருட்பாசுரம் பாடத் தொடங்கிய காலம் முதலே சிற்றிலக்கியங்கள் தோன்றிவிட்டன. அந்தாதி மடல், பல்லாண்டு பள்ளி எழுச்சி, பாவை, எழுகூற்றிருக்கை என்பன பல ஆழ்வார் பாசுரங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுந்த சிற்றிலக்கியங்கள் ஆகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *சிற்றிலக்கியம், செவ்வியல், ஆழ்வார் பாசுரங்கள், இலக்கணநூல்*

**Abstract**

*It can be considered that short stories have appeared in Tamil since the Sangam literary period. Pathappattu, Thirumurukaaruppadi, Porunararruppadi, Perupanarruppadi, Chirupanarruppadi and Kuttararruppadi are the five archetypes. Panirupatiyal give grammar to some of the earliest short stories of the tenth century.*

*In Pathinenkeezhkanikil, there are forty to seventy Muthumozhikanji in the nineteenth century. Sitralikiya vagaigal have appeared since the time when the Alvars and Nayans began to sing Arutpasuram. The Anthadi madal, Palandu Palli Eltchi and the Pavai, Ezhukutrukai are short stories that arose many centuries ago in many Alwar poems.*

***Keywords:*** *Sitralikiyam, Classical, Alwar Pasurangal, Grammar*

**Citation**

Gunasekar, K., and S. Sitharaman. "Influence of Classical Literature on Short Stories." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 2, 2021, pp. 28–34..

CC BY SA

https://doi.org/10.5281/zenodo.20327592

**சிற்றிலக்கியம்-அறிமுகம்**

*தொல்காப்பியத்தின் காலம் கி.மு 5ம் நூற்றாண்டு என் அறிஞர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் போன்ற செவ்வியல் இலக்கண நூல் தோன்றுவதற்கு முன்னரே தமிழ்மொழியில் எண்ணற்ற இலக்கியப் பெருநூல்கள் தோன்றியிருத்தல் வேண்டும். எள்ளிலிருந்து பிழியப்படும் எண்ணெய் போல இலக்கியம் கண்டதற்கேற்ப இலக்கணம் இயம்பப்படும் மரபுண்மைக்கேற்பத் தொல்காப்பியம் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழில் எண்ணிறந்த இலக்கியப் பெருநூல்கள் தோன்றித் தமிழ்மொழியைச் செழிக்கச் செய்திரக்கின்றன. எனவே தமிழ் இலக்கியத் தோற்றத்தின் தொன்மை நினைவுக்கு எட்டாத நெடுங்காலத்திற்குயது முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாய் விளங்கும் இறைவனை போல தமிழ்மொழியின் தோற்றமும் தொன்மைச் சிறப்பு உடையதாய்த் திகழ்கின்றது.*

**சிற்றிலக்கியம்-விளக்கம்**

*சிற்றிலக்கியம் அளவில் பாடல் எண்ணிக்கை (அ) அடிகளின் எண்ணிக்கை சுருங்கியதாக அமைவது. அகப்பொருள் (அ) புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும் கோவை போசூழு சில சிற்றிலக்கியங்கள் பல துறைகளைக் கொண்டு அமைவதும் உண்டு.*

*பாடப் பெறும் கடவுள் அமன்னன் அவள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும் எ.கா உலா இலக்கிச்யம் தலைவன் உலா வரும் காட்சியை மட்டுமே சிறப்பித்துப் பாடப்படுவதாகும். இவ்வகையில் தூது உலா பிள்ளைத் தமிழ் கலம்பகம் பரணி பொருணராற்றுப்படை நிராமயக் கன்னி பராபரக்கன்னி குறவஞ்சி போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் என்ற வகைமையில் அடங்கும்.*

**உலா**

***ஊரொடு தோற்றமும் உத்தெனமொழிப***
***வழுக்கொடுசி வணிய வகைமையான (தொல். பொரு. புறம்-25)***

*உலா பிற்காலத்தில் சிற்றிலக்கியமாக இருந்த நிலையை இலக்கியமாக உருவாவதற்குக் காரணமாகியது.*

**சிற்றிலக்கியத்தில் கைக்கிளை**

*ஒரு தலைக்காதலை ஐந்து விருத்தச் செய்யுளால் கூறுவது அன்றி அறுபது வெண்பாக்களாலும் அமையும் "கைக்கிளை" மாலை எனவும் இது கூறப்படும். கைக்கிளை என்னும் சொல் ஒரு தலைக் காமத்தைக் குறிப்பதால் ஒருதலைக் காமம் தொடர்பான சிற்றிலக்கியம் கைக்கிளை என்று வழங்கப்படுகிறது.*

**பாட்டியல் நூல் தரும் விளக்கம்**

***ஐந்து விருத்தத்தாலே ஒரு தலைக்***
***காமத்தைக் கூறுவது கைக்கிளை (முத்துவீயம்-1109)***

*திருமுறைகளில் சிற்றிலக்கிய வகைகளும் சிற்றிலக்கியக் கூறுகளும்*

*முன்னரே இருந்த இலக்கிய, இலக்கண சொல்லாட்சிகள், பொருண்மைகள் ஆகியவை திருமுறைகளில் சிறு இலக்கியக் கூறாகவும், பெயரையும் பொருளையும் உள்ளடக்கிய வகையாகவே அமைந்தவை*

*ஆற்றுப்படை, இரங்கல், உலா, கலகம்பகம், கோவைதசாங்கம், தேவபாணி, தொகை, பல்லாண்டு, பள்ளியெழுச்சி, பாதாதிகேசம், பாவை, புலம்பல், மந்திரம், மறம் போன்ற பதிணைந்துஆகும்.*

*சிற்றிலக்கியப் பெயரை அல்லது அதன் பொருண்மையை மட்டும் கொண்டிருந்து பின்னாளில் இலக்கியமாகியவை அண்டகோசம் கைக்கிளை, திருப்புகழ், தூது, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், வாழ்த்து, வேட்கை என்ற பத்துமாகும். புதிதாகத் தோன்றி வளர்ந்த இலக்கியங்கள் இசைப்பா, சீட்டுக்கவி, கோப்பி பரசாதம், புராணம், வார்த்தை விண்ணப்பம், சேத்திரக் கோவை என்ற ஏழும் ஆகும். சிறு கூறாக இருந்து பின்னாளில் இல்லியமாகியவை அலங்காரம், ஆனந்தக் களிப்பு, உபதேசம், நாமக் கோவை போன்றவை இவ்வாறாக பக்தி இலக்கியங்கள் சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியை காண்கிறோம்.*

**சிற்றிலக்கியகால வரலாறு**

*சிற்றிலக்கியங்களை வடமொழியில் ''பிரபந்த'' என்பர் ''செம்மையாகக் கட்டப்பட்டது'' என்பது இதன் பொருள். அடியார்க்கு நல்லார், ''பிரபந்தம் என்பது அடிவரையறையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது'' என்பார். ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பிற்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்'' என்ற பெயர் இருப்பது இங்கு நினைக்கத்தக்கது*

*எல்லா இலக்கியங்களும் நன்கு கட்டபட்டவையே. எனவே, பிரபந்தம் என்ற சொல் சிற்றிலக்கியம் என்பதை ம்டும் குறிப்பிடாமையை உணர்ந்து சிற்றிலக்கியத்தை கட்டச் சிறு பிரபந்த (அ) சில்லறைப் பிரபந்தம் என்ற சொல்லாட்சியை பயன்படுத்தத் தொடங்கினர். இது நாளடைவில் தனித் தமிழாட்சி வலுவடைந்த நிலையில் ''சிற்றிலக்கியம்'' என்ற சொல்லாட்சி பயன்படுத்தபட்டது என்பர். ஒரு பொருள் குறித்துச் செய்யப் பெற்ற நெடும்பாட்டுக்கு (அ) பாடல் தொகுதிக்குச் சிற்றிலக்கியம் என்ற பெயரே இப்போது வழங்கி வருகிறது.*

**நூற்றாண்டுகளில் சிற்றிலக்கியகால நிலை**

*தமிழில் 17, 18, 19ம் நூற்றாண்டுகளில் ஆயிரக்கணக்கான சிற்றிலக்கிய நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவை பலவகையாகக் காணப்படுகின்றன. அவற்றுள் சில இலக்கியப் படைப்புகளாகவும் சில கலைச் செல்வங்களுக்கு உய இலக்கிய அமைப்புகளாகவும் திகழ்கின்றன. கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ், மாலை, தூது, உலா போன்றவை படித்து மிகழும் சிற்றிலக்கிய வகைகளாகும். பள்ளு, குறவஞ்சி, குளுவம், நொண்டி மகுடி போன்றவை நடித்து மகிழும் சிற்றிலக்கியங்களாகும்.*

**உலாவின் இலக்கணம்**

*உலா என்னும் சிற்றிலக்கியத்திற்கு பாட்டியல் நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளன. அவிநயம், பன்னிருபாட்டியல் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்து வீயம்,*

*பிரபந்ததீ பிகை, சாமிநாதம் முதலிய நூல்கள் உலா சிற்றிலக்கியத்தின் இலக்கணத்த விளக்கிக் கூறுகின்றன.*

*போதை முதல் ஏழு பருவ மகளிரும் வீதியில் உலா வரும் தலைவனைக் கண்டு காதல் கொண்டு வாடுவதாகப் பாடப் பெறுவது உலாவின் இலக்கணம் இதனை,*

*பேதை முதலா எழுவகை மகளிர் கண்டு*

***ஓங்கியவகை நிலைக்கு உயான் ஒருவனைக்***
***காதல் செய்தலின் வரும் கலிவெண்பாட்டே (ப.பா.142)***

*என்பது பன்னிரு பாட்டியல்*

***தெருவினிற் பேதை முதல் எழுவோர்கள் திறத்து வகை***
***ஒருவனை ஏத்தும் கலிவெண்பா உலா (ந.பா.45)***

*என்பது நவநீதப் பாட்டியல்*

***தியம்தொந்த பேதை முதல் எழுவர் செய்கை***
***மறந்தயர வந்தான் மறுகென்று அறைந்தகலி***
***வெண்பா உலாவாம் (வெ.பா.49)***

*என்பது வெண்பாபாட்டியல்*

*இவ்வாறே பிற பாட்டியல் நூல்களும் உலா என்னும் சிற்றிலக்கிய வகையின் இலக்கணத்தைக் கூறுகின்றன. பேதை முதல் ஏழு பருவப் பெண்களும் வீதியில் உலா வருகின்ற இறைவன் திருவுருவத்தையோ, பெரு மகனையோ, மன்னையோ கண்டு விரும்புவதாகப் பாடும் எழு பருவ மகளிர்க்கு உய விளையடல்களைப் பன்னிரு பாட்டியல் குறிப்பிட்டுள்ளது.*

**சிற்றிலக்கிய அகக்கூறுகள்**

*புதிய பாணாம இலக்கிய வகைகளுக்கும் புதிய, புதிய வெளிச்சப்பாடுகளுக்கும், உத்திகளுக்கும் தன்மை முழுமையாக வளப்படுத்திக் கொண்ட மொழி தமிழ்மொழி. இலக்கிய வரலாறுகளில் போலக்கியம் சிற்றிலக்கியம் எனும் மாற்று வகைப்பாடானது அண்மைக் காலத்தில் தோன்றிது. அளவினில் பொயதாகவும் மக்களுடைய வாழ்வினையும் சமூக நிலைகளையும் இன்றைய காலகட்டத்தில் அடையாளப்படுத்தியும், நெறிபடுத்தியும் இன்று போலக்கியமாக திகழ்கிறது.*

*அளவினில் சிறியதாகவும், கற்பனை திறன் மிகுதியாகவும் தெய்வங்களையும், மிகுந்த செல்வாக்கு மிக்கவர்களையும் மக்களையும் தலைவர்களாக்க கொண்டு உருவாக்கப்பட்டவை தான் சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன. சிற்றிலக்கியங்கள் இலக்கணத்தை செம்மையும் வெளிக் கொணர்வது பன்னிரு பாட்டியல் மற்றும் வச்சநந்தி மாலை ஆகிய நூல்கள் அழகாக எடுத்து இயம்புகின்றன.*

*இவ்வாய்வில் பக்தி இயக்க காலத்திலும் சிற்றிலக்கியத்தின் வளர்ச்சி உயர்ந்த நிலையை அடைந்து, நாயக்கர்களின் காலத்தில் சிற்றிலக்கியங்கள் அதிகபடியாக தோன்றின. சிற்றிலக்கியங்களில் செவ்வியல் இலக்கிய அகக்கூறுகள் பற்றி கலம்பகம், உலா, அந்தாதி, கோவை, பரணி, பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி, அம்மானை ஆகிய இலக்கியங்களில் இருக்கும் வேறுபாடுகளும் இவ்வாய்வில் சிறப்பாக எடுத்தியம்பப் பெற்றுள்ளது.*

**சிற்றிலக்கியத்தில் கலம்பகம்**

*கலம்பகம் என்ற சொல் கலவை என்ற பொருளில் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் உரையிலும் பயின்றுள்ளதை நோக்க, பாக்களாலும் பொருளாலும், உறுப்புகளாலும், அகக்கலவையாக நிலைப் பெற்று விளங்குகின்ற காரணத்தால் தான் இந்த இலக்கிய வகை கலம்பகம் என்ற பெயரால் முன்னோர்களால் அழைக்கபட்டிருக்கு வேண்டும் என அறியலாம்.*

*கலம்பகத்தின் இலக்கணங்களைப் பன்னிருப் பாட்டியல் சிதம்பரப்பாட்டியல், வெண்பாபாட்டியல், நவநீத பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்த தீபிகை தொன்னூல் விளக்கம், முத்துவீயம், பிரபந்த மரபியல், சுவாமிநாதம் முதலிய பாட்டியல் நூல்கள் பற்றியன சிற்றிலக்கிய செல்வாக்கு தன்மையினை செறிவாக அறியலாம்.*

**நூற்பா**

***சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு***
***முதற்கண் வெண்பாக் கலித்துறைபுயமே***
***அம்மானை ஊசல்யமகம் கனிமறம்***
***சித்துக்காலம் மதங்கிவண்டே. . .***
***. . . . . அனஅரும்பி (ந. கலம்பகம்)***

*சங்க இலக்கியங்களில் மலர்ந்து நந்திக் கலம்பத்தில் மணங் கமழ்ந்து பொலிவுறும் ஒரு சிற்றிலக்கிய பழரசம் எனலாம்*

**பிரபந்த மரபியல் சிற்றிலக்கியத்தில்**

*ஆசியர் பெயர் அறிதற்கியல வில்லை பிரபந்தங்களின் இலக்கண மரபைச் கட்டும் நிலையில் அமைந்தது என்ற கருத்தில் பிரபந்த மரபியல் எனும் பெயரமைய பெற்றது. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்றவரையறையை ஏற்படுத்திய முதல்பாட்டியல் சிற்றிலக்கிய நூல்தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்கள் என்று இலக்கிய உலகில் பரவலாகப் பேசப்பட்டு வந்தாலும் அத்துணை வகை இலக்கியங்கள் முதன் முதலில் இலக்கணம் பெற்றது இந்நூல் கண்ணே தான் மெருகு ஏற்றப்பட்டது சிற்றிலக்கியத்திற்கே பெருமை தேடிய நூல்*

*இதனை*

***பிள்ளைக்கவி முதல் புராணம்ஈறாத்***
***தொண்ணற்றாறெனும் தொகையதாம் (பி. மரசிற்றிலக்கியம்)***

*என நூலின் முதல் நூற் பாசிறப்பாக பாடல் மூலம் கூறுவதை அறிய முடிகிறது.*

**சிற்றிலக்கியத்தில் பிரபந்ததிரட்டு**

*19ம் நூற்றாண்டுகளில் எழுந்ததாகக் கருதப்படும் இந்த நூல் ஆசியர்யார் என தொயவில்லை. இந்த நூல் 10 இயல்களாக பகுக்கப்பட்டுள்ளது. முதலாம் இயலான "திரட்டியல்" சிற்றிலக்கியங்களின் இயல்பைத் திரட்டி மொழியும் பகுதி என்று பெயர் பொருத்தம் காட்டுவார். அன்னிதாமஸ் அவர்கள் இவ்வியல் சாதகம் தொடங்கி, ஒலியந்தாதி ஈறாக 96 பிரபந்தங்களின் இலக்கிய இலக்கணம் பற்றி பேசப்படுகிறது. (இலக்கிய வகைகளின் பட்டியலை பின்னிணைப்பில் காணலாம்).*

**நிறைவுரை**

*இவ்வாய்வில் அந்தாதி, உலா, தூது, கலம்பகம், பரணி, கோவை, பிள்ளைத்தமிழ், ஆற்றுப்படை, மடல், பள்ளு, குறவஞ்சி, சதகம், மும்மணிக் கோவை, நான்மணிமாலை முதலானவை சிற்றிலக்கியத்தின் சிறந்த உயிர் பெற்ற இலக்கியமாக திகழ்கறது. இவற்றுள் உலா, தூது, கோவை, மடல், கைக்கிளை, காதல் என்பன அகப்பொருள் துறையினை சார்ந்து எழுந்த சிற்றிலக்கிய வகை பிறவெல்லாம் புறம் பொருள் சார்ந்தவை. மேலும் தொல்காப்பியத்துள் கூறப்படும் புறத்துறைகள் பல பிற்காலத்தே சிற்றிலக்கியங்களாக மலர்ந்து வந்தன என்பது உண்மை. உலா, பிள்ளைத்தமிழ், ஆற்றுப்படை, பள்ளியெழுச்சி, இயன் மொழி வாழ்த்து, செவியறிவுறூஉ ஆகியவற்றைக் கூறலாம். இவ்வாய்வில் இலக்கியம் கூறும் ஒவ்வொரு உத்திகள், அகப்புற செய்திகள் வகைமைகள், பண்பாடு, கலாச்சாரம், பாடு பொருள் எல்லாம் மானுட வாழ்க்கையை மனிதர்களைப் பாடுப்பொருளாக உடையன என்னும் அடிப்படைச் செய்தி நினைவினில் கொள்ளத்தக்கது. ஆயினும் தமிழுக்கே பொருளிலக் கணம் உயது என்னும் பெருமிதத்தின் அடிப்படையாகவும் உட்கோளாகவும் அமைகிறது என்பனவற்றை இவ்வாய்வானது சிறப்பாக புலப்படுத்துகிறது.*

*ஒழிபியலில் சில சிற்றிலக்கியங்கள் புதியனவாக புதுவடிவமாக அறிமுகம் ஆகின்றன. அவை- திருமுகவிலாசம், விசைய விலாசம், சமுக விலாசம், சமுகம், ஆன்ம நிலை, பல தொகை, சுலோசம் என 22 சிற்றிலக்கியங்கள் புதியனவாக வடிவம் பெறுவதை அறிய முடிகிறது.*

**துணை நூல்கள்**


*1. முனைவர் இரா. இராம கிருஷ்ணன் சிற்றிலக்கியம் ஓர் அறிமுகம் பக்.19*
*2. மருதூர் அரங்கநாதன் இலக்கண வரலாறு பாட்டியல் நூல்கள் சென்னை மணிவாசகர் பதிப்பு 2008*
*3. கதிர்முருகு முக்கூடற்பள்ளு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம் சென்னை 2011*
*4. கதிர்முருகு நந்திகலம்பகம் மூலமும் உரையும் சீதை பதிப்பகம் சென்னை 2010*
*5. இரா. இராம கிருஷ்ணன் சிற்றிலக்கிய உலா ஈரோடு பல்லவி பதிப்பு 2017*
*6. இரா. இராம கிருஷ்ணன் தூது இலக்கியம் ஈரோடு பல்லவி பதிப்பு 2017*
*7. சோம. இளவரசு பரணி இலக்கியம், சிதம்பரம் மணிவாசகர் நூலகம் 1978*
*8. ந. உமாதேவி சிற்றிலக்கியக் கட்டுரைகள் தொகுதி - 1 சிதம்பரம் மெய்யப்பன் பதிப்பு 2014*
*9. கண்ணன் இரா சிற்றிலக்கிய ஆராய்ச்சி முதல் தொகுதி சென்னை பதிப்பு 2002*
*10. சத்தியபாமா. கா. பள்ளு இலக்கியங்கள் சென்னை கலைஞன் பதிப்பு*
*11. ந.வீ.ஜெயராமன் சிற்றிலக்கிய செல்வம் சிதம்பரம் மணிவாசகர் பதிப்பு 1979*
*12. நாஞ்சில் நாடன் சிற்றிலக்கியங்கள் சென்னை தமிழினி 2013*
*13. மு.பொன்னுசாமி தமிழ் சிற்றிலக்கிய வரலாறு சென்னை பா நிலையம் 2016*


## References


*1. Ramakrishnan, R., An Introduction to Sitralikiyam, P.19.*
*2. Marudur Aranganathan Elakana Varalaru Patiyal Noolgal, Chennai Manivasakkar Pathippu, 2008.*

3. *Kadirmuruku Mukkodar Pallu Moolamum Uraiyum, Sharda Pathipagam, Chennai 2011.*
4. *Kadirmurugu Nandikalambakam Moolamum Uraiyum, Sita Pathipagam, Chennai 2010.*
5. *Ramakrishnan, R., Sitralikiya Ula, Erode Pallavi Pathipu, 2017.*
6. *Ramakrishnan, R., Thoothu Elakiyam, Erode Pallavi Pathippu, 2017.*
7. *Soma.Elavarasu, Parani Elakiyam, Chidambaram Manivasakkar Noolagam, 1978.*